


ஆதித்தமிழர்
பேரவை
20.12.2011


பேரவை


பேரவை


ஆதித்தமிழர்
பேரவை


ஆதித்தமிழர்
பேரவை
20.12.2011






பயணிகள் கூட்டம் நேற்று அதிகமாக காணப்பட்டது.

## அருந்ததியர் உள் ஒதுக்கீடு உயர்த்த ஆதிதமிழர் பேரவை வலியுறுத்தல்

ஈரோடு, டிச. 22: ஆதிதமிழர் பேரவையின் மாவட்ட பொதுக்குழு கூட்டம் ஈரோடு தமயந்திபாபுசேட் மண்டபத்தில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் வீரகோபால் தலைமை தாங்கினார். பேரவையின் நிறுவனர் அதியமான் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். அருந்ததியர் உள் இடஒதுக்கீட்டை 6 சதவீதமாக உயர்த்தப்படும் என்று அதிமுக தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டது. இதை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். முல்லை பெரியாறு பிரச்சனையில் கேரள அரசின் நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்தல், உச்சநீதிமன்ற தீர்ப்பை கேரள அரசு நடைமுறைப்படுத்த வேண்டும், இப்பிரச்சனையில் மத்திய அரசு தலையிட்டு தீர்வு காண வேண்டும், கூடங்குளம் அணு மின் நிலையத்தை நிரந்தரமாக மூட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தினகரன்

ஈரோடு மாவட்ட

## ஆதித்தமிழர் பேரவை பொதுக்குழு கூட்டம்

ஈரோடு, டிச. 23–

ஆதித்தமிழர் பேரவையின் ஈரோடு மாவட்ட பொதுக்குழு கூட்டம், ஈரோடு மாநகராட்சி தமயந்தி பாபுசேட் திருமண மண்டபத்தில் நடந்தது. மாவட்ட செயலாளர் வீரகோபால் தலைமை தாங்கினார். மாநகர செயலாளர் இயமவரம்பன் முன்னிலை வகித்தார். கட்சியின் தலைவர் அதியமான், மாநில தலைவர் இளங்கோவன், பொதுச்செயலாளர் நாகராசன், நிதிச்செயலாளர் பெருமாவளவன், தலைமை நிலைய செயலாளர் தமிழ்வேந்தன், கொள்கைபரப்பு செயலாளர் தீபா ஆகியோர் பேசினார்கள்.

அருந்ததியர் இடஒதுக்கீட்டை 6 சதவீதமாக உயர்த்த வேண்டும். கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு தடை விதிக்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இதில் மாவட்ட செயலாளராக வீரகோபாலும், தலைவராக தமிழ்இன்பனும், துணைத்தலைவராக சிவப்பிரியாவும், நிதிச்செயலாளராக அறிவழகனும், தலைமை நிலைய செயலாளராக வீரவேந்தனும், கொள்கை பரப்பு செயலாளராக பழனிச்சாமியும், அமைப்பு செயலாளராக செந்திலும் தேர்ந்து எடுக்கப்பட்டன. முடிவில், தமிழ்இன்பன் நன்றி கூறினார்.